Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி -29 | 14-07-2003 | திங்கட்கிழமை | ஓசை 146

நலிவுற்றோர் நலன் வாழ்வுத் திட்டம்

நலிவுற்றோருக்கு உதவுவோம்

கொடிவாரம்

01.07.2003 - 21.07.2003

சமுதாய முன்னேற்ற நிலையம், தலைமைச் செயலகம், கிளிநொச்சி.

# சிறிலங்காக் கடற்படைக்கு இஸ்ரேலிடமிருந்து

# 15 பீரங்கிகளைக் கொள்வனவுசெய்ய முடிவு

## 15பீரங்கிகள் அமெரிக்காவிடம் கொள்வனவிற்குத் திட்டம்

(கொழும்பு)

**சிறிலங்காக் கடற்படை 12.3 மில்லியன் டொலர் பெறுமதியான 15 பீரங்கிகளை இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது. அமெரிக்கா இப்பீரங்கிகளை 4.42 மில்லியன் டொலர்களுக்கு வழங்கத் தயாராக உள்ளபோதும், சிறிலங்கா கடற்படை வழமையாக இஸ்ரேலிடமிருந்தே ஆயுததளபாடங்களை கொள்வனவு செய்வதாலும் விரைவாக இப்பீரங்கிகளை வழங்கக் கூடிய நிலையில் இஸ்ரேல் இருப்பதாலும் இவற்றை இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்ய சிறிலங்காக் கடற்படைத் தளபதி முடிவு செய்துள்ளார்.**

அத்துடன் இப்பீரங்கிகள் சிறிலங்காக்கடற்படைப் படகுகளில் பொருத்தப்படக்கூடியவை என உறுதி படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.சிறிலங்காக் கடற்படையின் அதிவேகப்படகுகளில் பொருத்தப் படக்கூடிய பீரங்கிகள் குறித்து ஆராயவென கடந்த வருடம் விசேடமாக நியமிக்கப்பட்ட அமெரிக்கக் குழு ஒன்று 30மி.மீ.ஒற்றைக் குழல் "புஸ்மாஸ்ரர்" பீரங்கிகளைச் சிபார்சு செய்திருந்தது.

இதற்கமைய இவ்வாறான 30 பீரங்கிகளைக் கொள்வனவு செய்வதென்றும் அவற்றில் 15 பீரங்கிகளை இஸ்ரேலிடமிருந்தும் 15 பீரங்கிகளை அமெரிக்காவிடமிருந்தும் கொள்

(08ம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலிடமிருந்து ஆயுதக் கொள்வனவு; செல்வம் அடைக்கலநாதன் கண்டனம்

(லண்டன்)

இஸ்ரேலிடமிருந்து நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கண்டித்துள்ளார். இஸ்ரேலுக்குச்சென்றுள்ள படைத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவும் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியும் ஆயுதக்கொள்வனவில் ஈடுபடுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதுகுறித்து தமிழ்மக்களும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விசனமும் கவலையும் அடைந்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற டோக்கியோ மாநாட்டில் மேலதிகமாக 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றதன் மூலம் அதிகமான நிதியைத் தமது அரசு பெற்று

(08ம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 21.05.2003 அன்று சிறிலங்கா இராணுவக் கைக்கூலிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். வெ.பூவணன் (காத்தமுத்து கோணேஸ்வரன் கண்ணகி அம்மன் கோவில் வீதி, 01ஆம் குறிச்சி காரைதீவு) எனும் போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

(08ம் பக்கம் பார்க்க)

## புதிய ஆட்சேர்ப்பிற்கு சிறில.ராணுவம் திட்டம்!

சிறிலங்கா இராணுவம் பெரும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்குத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நடவடிக்கை இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.கடந்த 16 மாதங்களாக கடைப் பிடிக்கப்பட்டு வரும் யுத்தநிறுத்த காலத்தில் 10 ஆயிரம் பேர் படையி லிருந்து தப்பியோடியதாகத் தெரிவிகப்படுகிறது.

## எறிகணை வெடித்தது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கடைத் தொகுதிகள் சூழ்ந்த இடத்தில் எறிகணை ஒன்று வெடித்துள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இவ் வெடிவிபத்தில் பாதிப்புக்கள் எவையும் ஏற்படவில்லை கடைக்குப் பின்புறமாகவுள்ள வளவில் துப்புரவுப் பணியை முடித்து குப்பைகளைக்

(08ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் இன்று வன்னி வருகிறார்

(லண்டன்)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலல்சன் இன்று வன்னிக்கு வரவுள்ளார். இங்கு அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின்போது கிண்ணியா குரங்குப்பாஞ்சான் குளம் பகுதியில் சிறிலங்காப் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்தும் ஆராயப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(08ம் பக்கம் பார்க்க)

## சு.க-ஜே.வி.பி.கூட்டமைப்பு சனாதிபதி மீள்பரிசீலனை

கூட்டமைப்பு ஏற்படுத்தும் யோசனை மீள்பரிசீலனை செய்ய முடிவு செய்துள்ளதாக சிறிலங்கா சனாதிபதி ஜே.வி.பி.க்கு அறிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யோடு கூட்டுச்சேர்வதை சனாதிபதியின் மகன் விமுக்தி குமாரணதுங்க விரும்பவில்லை. அவர் தாயாரிடம் ஜே.வி.பி.யோடு கூட்டுச் சேர வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளதோடு தனது மாமனாரான அநுரா பண்டார நாயக்கவிடமும் தனது அப்பாவைக் கொலை செய்தவர்களோடு கூட்டு வைக்கவேண்டாமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மக்கள் குடியிருப்புக்களில் தேடுதல் நடவடிக்கை; எம்மை அடுத்தகட்டம் குறித்து சிந்திக்கவைக்கும்

### மட்டு.அம்பாறை துணை அரசியல்துறைப் பொறுப்பாளர்

பொதுமக்கள் வாழும் இடங்களில் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்வது எமது அடுத்தகட்ட நடவடிக்கைகளைப் பற்றி சிந்திக்கத் தூண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் கிருஷ்ணன் எச்சரிக்கை செய்துள்ளார்.

இந்த சுற்றிவளைப்புத் தேடுதல்களை படையினர் எதற்குச் செய்கின்றார்கள், என்ன காரணத்தைக் கொண்டு செய்கின்றார்கள் என்று எமக்குத் தெரியாது. ஆனால் இது தொடருமாயின் சமாதானத்தைச் சீர்குலைந்து இப்போதிருக்கின்ற சூழ்நிலைமாறி இதற்கெதிரானதொரு சூழ்நிலை உருவாகும். படையினரின் இந்நடவடிக்கை புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் செயலாகும் சுற்றிவளைப்புத் தேடுதலைப் படையினர் ஆரம்பித்தபோது படை உயர் அதிகாரியோடு தொடர்புகொண்ட போது அந்த அதிகாரி அந்த இடத்தில் இருக்கவில்லை. அவருக்குப் பதிலாக இருந்த ஒருவர் தனது

(08ம் பக்கம் பார்க்க)

## ஏ – 9 வீதியில் மூன்று விபத்துக்கள் பெண் உட்பட மூவர் காயம்

( அலுவலக செய்தியாளர்)

ஏ-9 வீதியில் கிளிநொச்சி நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் பெண் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர். செல்வநாயகம் ஜஸ்ரின் (வயது 21) மதன் (வவுனியா மதுராகளஞ்சியம்) ஆகியோர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர். இவர்களில் மதன் என்பவர் படுகாயமடைந்துள்ள நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.மேற்படி விபத்துக்களுக்கு மிதமிஞ்சிய வேகமும் சைகைகள்

(08ம் பக்கம் பார்க்க)

## வெளிமாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து 20 ஆயிரம் குடும்பங்கள் மீளக் குடியமரவில்லை

### யாழ். செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிப்பு

இராணுவ நடவடிக்கைகளால் யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் குடியேறியுள்ள 20000க்கு அதிகமான குடும்பங்கள் இன்னமும் மீள் குடியமரவில்லை என்று யாழ். செயலகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஏ-9 பாதை திறக்கப்பட்டு பல குடும்பங்கள் மீண்டும் யாழ்ப் பாணம் திரும்பியுள்ளபோதும் அவர் களது சொந்த வீடுகளில் குடியேற இராணுவத்தினர் இன்னமும் அனுமதிக்கவில்லை. உயர்பாது காப்பு வலயங்கள் என்ற போர்வையில் மக்களை மீளக்குடியேற அனுமதிக்காததினால் மக்கள் இன்றும் அவஸ்தைப்படுகிறார்கள்

இந்த நிலையில் யாழ். குடா நாட்டிலுள்ள 80 நலன்புரி நிலையங்களில் 2124 குடும்பங்களைச் சேர்ந்த 9000க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதனைவிட 19324 குடும்

(08ம் பக்கம் பார்க்க)

## வேலணை கடற்படைமுகாம் மின்சார வேலியை மக்கள் அகற்றினர்

வேலணை ஐயனார் வித்தியாலயத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த கடற்படையினரின் மின்சார முட்கம்பி வேலியை நேற்று அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர் அகற்றியுள்ளார்கள்.

இப்பாடசாலை மாணவன் இந்த முட்கம்பி வேலியில் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரத்தால் தாக்கப்பட்டது தொடர்பாக ஆத்திரமடைந்த மக்கள் கடற்படையினரை குறிப்பிட்ட மின் கம்பி வேலியை அகற்றுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

இதனைக் கடற்படையினர் அலட்சியம் செய்தனர்கள். இதனையடுத்து ஆத்திரமடைந்த மக்கள், கண்காணிப்புக்குழுவினர் அப்பகுதியில் நின்ற வேளை நேற்றைய தினம் அந்த முட்கம்பி வேலிகளை அகற்றியுள்ளனர். இதன்போது கடற்படையினர் எந்தவித தடுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடாது மௌனமாக இருந்துள்ளனர். (33)

## விடுதலைப் புலிகள் நிதிசேகரிக்க சர்வதேச ரீதியாக தடையில்லை

### - நோர்வே அமைச்சர் எர்ணோ சல்பேட்

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் நிதி சேகரிப்பதற்கு சர்வதேச ரீதியாக எந்தவித தடையும் இல்லையென்று நோர்வேயின் உள்ளூராட்சி மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் எர்ணோசல்பேட் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தமது நாட்டில் இடம் பெறும் நிதிசேகரிப்பு முறை மற்றும் அது தொடர்பாக மக்கள

(08ம் பக்கம் பார்க்க)

# தென்பகுதி உற்பத்திகளை நம்பியிராது உள்ளூர் உற்பத்திகளில் அக்கறை வேண்டும்

## - கூட்டுறவாளர்களிடம் மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி

தென்னிலங்கை உற்பத்திகளை முழுமையாக நம்பியிருக்காமல் எமது மண்ணில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை உற்பத்திசெய்வதில் கூட்டுறவு நிறுவனங்கள் அக்கறை எடுக்க வேண்டுமென மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி ரமேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் கூட்டுறவாளர்களுக்கான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைக் கூறியுள்ளார். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் தென்னிலங்கை உற்பத்திகளை உற்பத்திசெய்த நிறுவனங்கள் பல தென்னிலங்கை உற்பத்திகளின் ஆக்கிரமிப்பால் தமது உற்பத்திகளைத் தற்போது கைவிட்டுள்ளன. எனவே இவற்றை மீள உற்பத்திசெய்து எமது தாயக வளத்தை உச்ச பயன்பாட்டிற்கு கொண்டுவர கூட்டுறவு நிறுவணங்கள் கூடிய அக்கறை எடுக்க வேண்டுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

கூட்டுறவாளர்களின் கடந்தகால மற்றும் தற்போதைய செயற்பாடுகள் பற்றியும் பல விடயங்கள் குறித்தும் இதில் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பன்னிரண்டாம் ஆண்டில் நினைவலைகள்**

பிறப்பு 28 - 05 - 1962

வீரச்சாவு 14 - 07 - 1991



**லெப். கேணல் சூட்டி**
**இராசு செல்வேந்திரன்**
சாவகச்சேரி

சூரிய விழிகள் தன்னில்
குறுநகை கொண்டோன்; எங்கும்
நேரிய பார்வை கொண்டே
நடப்பவன்; எதிரி மீது
போரெடுத்தேவி நின்ற
'புலி'யவன் சாகவில்லை
சூரியத் துணையாய் என்றும்
'சூட்டி' எம் உள் ஒளிர்வான்.

குடும்பத்தினர்.

(3445)

## முன்பள்ளியில் இலைக்கஞ்சி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கியூடெக் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினால் கோணாவில் கரிகாலன் முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கரிகாலன் முன்பள்ளியில் கல்வி பயிலும்25இற்குமேற்பட்ட மாணவர்கள் சீரான போசாக்கு நிலையை அடைந்துவருகின்றனர் எனவும் புனர்வாழ்வுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (லோ)

## இடைக்கால நிர்வாகம் குறித்து கலந்துரையாடல் அவசியம்

### ல.ச.ச. கட்சித்தலைவர் பட்டிவீரக்கோன்

(கொழும்பு)

வட-கிழக்கின் அபிவிருத்திக்கெனஇடைக்காலநிர்வாக அமைப்பொன்றை உருவாக்கும் சக்தி இப்போது அரசிற்கு உண்டென லங்கா சமசமாஜக்கட்சி தெரிவித்துள்ளது.

இந் நிர்வாகக் கட்டமைப்பில் புலிகளும் ஒரு தரப்பினராக இருப்பார்கள் என இக் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார். மத்திய அரசினால் இவ் அமைப்பு நிர்வகிக்கப்படவேண்டுமென அவர் மேலும் கூறியுள்ளார். வட- கிழக்கிற்கு இடைக்கால அரசியல் நிர்வாகத்தை வழங்கும் போது ஏனைய அரசியல் கட்சிகளினதும், குழுக்களினதும் சனநாயக உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

இந்த நிர்வாகத்தை வழங்குவதற்கு முன்னர் மக்கள் மத்தியில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

**8ஆம் ஆண்டு நினைவலைகள்**



**கப்டன் அருந்ததி**
**பாலச்சந்திரன் காஞ்சனா**

தமிழ் காக்க தமிழ் மண் மீட்க தலைவன் வழியில்
தனை இணைத்து
தளராத துணிவோடு பல களமாடி
புலிப்பாய்ச்சலுடன் புனித வேள்வியை
முடித்தவளே! எழில் முகம் காணாது ஏங்குகிறோம்.
எட்டென்ன எண்ணூறு ஆண்டானாலும்
எம்துயரம் மாறாது – இந்நாளில்
மண்ணுக்காய் மரணித்த மாவீரரையும்
நினைவு கூருகிறோம்.

**இதேதினம் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.**

உருத்திரபுரம். (3447) குடும்பத்தினர்.


வேளாண் பெருமக்களுக்கு ஒரு நற்செய்தி

வேளாண் மேம்பாட்டிற்கு உறுதுணையாக, உழவர் பெருமக்களின் நண்பனாக நாளை 2003-07.15 ஆம் நாள் தனது பணியைத் தொடங்குகிறது.

"வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனம்"

(THE VANNI AGROTECHS)

பின்வரும் பணிகளை முதன்மைப்படுத்துகிறது

- வேளாண் பொறிகளையும் கருவிகளையும் விற்பனை செய்தலும் வாடகைக்கு விடுதலும்.
- மண்வள ஆய்வு
- மண்ணுக்கேற்ற வளமாக்கிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்தல்.
- வேளாண் மேம்பாட்டிற்குத் தேவையான தொழில்நுட்ப மதியுரையும் பயிற்சியும் வழங்குதல்
- நல்லின விதை விற்பனை
- விளைபொருளுக்கு உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- கால்நடை மேம்பாட்டிற்கு உள்ளீடுகளை விற்பனை செய்தலும் மதியுரை வழங்குதலும்.

THE VANNI AGROTECHS

என்றென்றும் உழவரின் நண்பனாக பணியாற்றக் காத்திருக்கும்

"வன்னிவேளாண் தொழில்நுட்ப நிறுவனம்"

(3448)

# ஈராக்கின் பேரழிவு ஆயுத சர்ச்சையால் அமெரிக்காவில் புஷ் நிர்வாகம் திணறல்!

## எதிரணியுடன் ஆளும் கட்சியினரும் இணைவு

(வொஷிங்டன்)

**ஈராக் விவகாரத்தில் அமெரிக்கா கைக்கொண்ட விடயங்களால் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பெரும் சர்ச்சை உருவாகியுள்ளது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலரும் புஷ் நிர்வாகத்திற்கு எதிராக எதிரணியுடன் கைகோர்த்துள்ளனர். இதனால் இங்கு பெரும் நெருக்கடி நிலை உருவா கியுள்ளது.**

ஈராக்கில் சதாம் ஹுசைன் பேரழிவு ஆயுதங்களைக் குவித்து வைத்திருந்ததாக அமெரிக்க அரசு கூறியது தொடர்பாக புலன் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாகத் தற்போது வலுத்துள்ள சர்ச்சை குறித்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியான சனநாயக கட்சி உறுப்பினர்களுடன் ஆளும் குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் அமெரிக்க சனாதிபதி புஷ் நிர்வாகத்திற்கு எதிராக கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே சதாம் ஹுசைன பேரழிவு ஆயுதங்களைக் குவித்து வைத்திருந்ததாக பிரிட்டிஷ் அரசு கூறியது அடிப்படையான தவறு என்று ஐநாவின் முன்னாள் ஆயுதத் தலைமை ஆய்வாளர் கான்ஸ் பிலிக்ஸ்சும் கூறியுள்ளமை சர்ச்சையை மேலும் அதிகரித்துள்ளது.

இதனிடையே பேரழிவு ஆயுதங்களுக்காக சதாம் ஹுசைன் ஆபிரிக்காவில் இருந்து யுரேனியம் வாங்கியதாக தான் கூறிய குற்றச்சாட்டுக்கள் உண்மையே என்று பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.



ஆபிரிக்க அமெரிக்க உறவுகளை உயர்த்தும் வருடாந்த சந்திப்பொன்றில் கொலின்பவல் உரையாற்றுவதை அவதானிக்கும் ஜோர்ஜ் புஷ்சும் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீசா றைஸ்சும்.

### சாகஸ நிகழ்வில்விபத்து; இருவர் பலியாகினர்!

இங்கிலாந்தின் டக்பூர் நகரில் நடந்த கடற்படையின் விமான சாகஸ நிகழ்வில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி தரையில் வீழ்ந்ததில் இருவர் பலியாகினர்.

2-ம் உலக மகாயுத்தத்தில் பங்கேற்ற விமானமொன்றே விபத்தில் அழிந்துள்ளது. விமானம் மக்கள் கூடி நின்ற இடத்தில் விழாது வெளியான இடமொன்றில் வீழ்ந்துள்ளதால் அதிலிருந்த விமானியும், கடற்படை வீரர் ஒருவருமே பலியாகினர்.



பாக்தாத்தில் அமெரிக்க இராணுவ முகாம் தாக்கப்பட்டதை அடுத்து ரமாதி நகரில் ரோந்துப் பணியில் ஈடுபடும் அமெரிக்கத் துருப்பினர்.

# 50 இலட்சம் பேர் உணவின்றிப் பாதிப்பு சிம்பாவ்வே அவசர உணவு உதவி கோரல்!

(ஹராரே)

சிம்பாவ்வேக்கு உணவு உதவிகளை வழங்குமாறு அந்நாட்டின் அரசு விடுத்துள்ள வேண்டுகோளுக்கு ஆதரவாக சிம்பாவ்வே எதிர்க்கட்சிகள் குரல கொடுத்துள்ளன.

வரட்சியின் காரணமாக உணவின்றிப் பாதிக்கப்பட்டுள்ள 50 இலட்சம் பேரிற்கு உடனடியாக உதவிகளை வழங்குமாறும் சிம்பாவ்வேயின் எதிர்க்கட்சிகள் உலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

எனினும் சிம்பாவ்வே உத்தியோகபூர்வமாக நிவாரண உதவியைக் கோர வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமையத்தின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட உதவிகள் சிம்பாவ்வேயைச் சென்றடைய குறைந்தளவு 03 மாதங்கள் எடுக்குமெனத் தெரிய வருகிறது.

# லாடன், லாலே சகோதரிகள் தனித்தனியாகப் புதைப்பு!

(தெஹ்ரான்)

சிங்கப்பூரில் ஒட்டிய தலைகளைப் பிரிக்க நடந்த அறுவைச் சிகிச்சை முயற்சி பலன் இன்றி உயிரிழந்த ஈரானிய சகோதரிகள் லாடன்,லாலே ஆகியோரின் இறுதிச் சடங்குகள் ஈரானின் சிறிராபாத்தில நேற்று முன்தினம் நடைபெற்றது.

இருவரும் தனித்தனியே புதைக்கப்பட்டனர். லாடன்,லாலே நகரம் என்று அந்த ஊரின் பெயரையே மக்கள் மாற்றிவிட்டனர்.

இந்த அறுவைச் சிகிச்சையைப் படிப்படியாகச் செய்திருக்கலாம் என்று சிகிச்சையில் பங்குகொண்ட அமெரிக்க மருத்துவர் ஒருவர் கூறுகின்றார்.

இந்த அறுவைச் சிகிச்சையைத் தவிர்க்கும்படி கடைசி நேரம் வரை அந்த சகோதரிகளுக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தப்பட்டது. ஆனால், ஒட்டிப் பிறந்தாலும் வெவ்வேறு ஆசைகளையும், இலக்குகளையும் கொண்ட அவர்கள், இரு தனிமனிதர்களாகப் பிரிந்தேஆக வேண்டும் என்று கொண்டிருந்த தீராத வேட்கையே அறுவைச் சிகிச்சைக்குக் காரணமாகியது என்றும் குறித்த மருத்துவமனை அதிகாரிகள் கூறினர்.

# ஆபிரிக்காவை தளமாகப் பயன்படுத்தி உலகை அச்சுறுத்த அனுமதியோம்!

## -சனாதிபதி புஷ் சூளுரை

உலகை அச்சுறுத்துவதற்கு ஆபிரிக்காவை ஒரு தளமாகப் பயன்படுத்த நாம் அனுமதிக்கப் போவதில்லையென சனாதிபதி புஷ் எச்சரிக்கை செய்துள்ளார்.

ஆபிரிக்க நாடுகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின் இறுதிக் கட்டமாக அமெரிக்காவில் முக்கிய எண்ணெய் விநியோக நாடான நைஜீரியாவில் நேற்று முன்தினம் அவா உரையாற்றிய போது நைஜீரியாவில் சமாதானத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கும் உலகின் மிகப் பெரிய பிராந்தியமான ஆபிரிக்காவில் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் இப்பிராந்தியம் எயிட்ஸ் நோயை எதிர்த்துப் போராடுவதற்கும் நிதி உதவி அளிக்க உதவுவதாக உறுதியளித்துள்ளார்.

ஆபிரிக்க பிராந்தியத்தின் எண்ணெய் வளங்களில் அமெரிக்கா தங்கியிருக்கும் தன்மை அதிகரித்து வருவதாலும் ஆபிரிக்க நாடுகளின் பலவீனமான எல்லைகள், உறுதியற்ற சட்டங்கள் ஆகியவற்றினால் ஒசாமா பின்லாடனின் அல்ஹைதா இயக்கத்திற்கு அப்பிராந்தியத்தில் பல அனுகூலங்கள் இருப்பதாலும் அதன் மீது கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை சனாதிபதி புஷ் வலியுறுத்தியுள்ளார்.

05 நாள் ஆபிரிக்க சுற்றுப் பிரயாணத்தின் போது பிராந்தியத்திலுள்ள 05 நாடுகளுக்கு விஜயம் செய்த புஷ் கிழக்காபிரிக்க நாடுகள் சமீபகால அல்ஹைதா தாக்குதல்களைத் தொடர்ந்து அவற்றின் எல்லைகளைப் பலப்படுத்த 10 கோடி அமெரிக்க டொலரைத் தருவதாக உறுதியளித்துள்ளார்.

# கொங்கோ யுத்தம் முடிந்தது பிரதான கிளர்ச்சிக் குழு அறிவிப்பு!

## புதிய அரசு 19 இல் பதவியேற்பு

கொங்கோ சனநாயக குடியரசின் மிகப்பெரும் கிளர்சிக குழுவின் தலைவர் நாட்டின் நான்கு வருடகால யுத்தம் ஒரு முடிவிற்கு வந்துள்ளதென கூறியுள்ளார்.

புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள சமாதானத் திட்டத்தின் முக்கிய கட்டமாக அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் அரசாங்கம் ஒன்றை அமைக்க ருவண்டா ஆதரவிலான கிளர்ச்சிக்குழுவின் தலைவர் புதிய அரசாங்கத்தின் நான்கு உதவி சனாதிபதிகளில் ஒருவராக அடுத்த வாரம் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார். புதிய அரசு முதற்தடவையாக இம் மாதம் 19ஆம் திகதி கூடவுள்ளது.



இந்தியாவின் அகமதாபாத்தில், இடுப்புப் பகுதியில் இணைந்த இரு பெண்கள் இவர்களுள் ஒருவர் அண்மையில் ஈரானிய இரட்டையர்களின் சத்திர சிகிச்சை தோல்வியடைந்ததையடுத்துத் தமது சத்திரசிகிச்சைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

# பெல்ஜியத்தில் பதவியேற்றுள்ள அரசின் முதல் நடவடிக்கை!

(புருஸ்ஸெல்ஸ்)

அமெரிக்க சனாதிபதி புஷ் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர், இஸ்ரேலிய பிரதமர் ஏரியல்ஷரோன் ஆகியோருக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு வழிவகுத்த சர்ச்சைக்குரிய யுத்த குற்றச் செயல்கள் பற்றிய சட்டமொன்றை நீக்கிவிடுவதெனப் பெல்ஜியம் தீர்மானத்துள்ளது.

நேற்று முன்தினம் பதவிக்கு வந்த புதிய பெல்ஜியம் அரசின் பிரதம மந்திரி அமெரிக்காவை ஆத்திரமடையச் செய்த இந்தச் சட்டத்தை நீக்கிவிடுவதே தமது புதிய அரசின் முதற்கடமையெனக் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் பெல்ஜியம பிரஜைகள் அல்லது பெல்ஜியத்தில் வசிப்பவர்கள் மாத்திரமே இத்தகைய வழக்குகளைத் தாக்கல் செய்யலாம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# அரச ஊழியர் போராட்டம் கைவிடப்பட்டது; அரசுடன் பேச்சு நடத்தத் தீர்மானம்

(சென்னை)

தமிழக அரச ஊழியர், ஆசிரியர்களின் பதினொரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் கைவிடப்பட்டுள்ளது.

இதற்காக உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப் போவதில்லை. வேலை நிறுத்தத்திற்கு முன்னைய யூலை முதலாம் திகதி நிலைப்படி தமது பணிகளை மீண்டும் பெறுவதற்காக முதலமைச்சருடன் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடருவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களையும் மீண்டும் பணியாற்றக் கோரி அரசுடன் நிபந்தனையற்ற பேச்சவார்த்தை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போனஸ் மற்றும் வேறு சலுகைகளை மீண்டும் வழங்கக்கோரி மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தனர். இதனால் ஆயிரக்கணக்கானோர் தமிழக அரசால் வேலை நீக்கம் செய்யப்பட்டு உடனடியாக புதியவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டமை தெரிந்ததே.

## - வடக்கு-கிழக்கு மாகாண ங்களில் -

# அடுத்த ஆண்டு முதல் மாணவர்களுக்கு மிதிவெடி விழிப்புணர்வு பாடவிதானம்!

(கொழும்பு)

**வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளின் பாடத் திட்டத்தில் 2004ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான விடயம் உள்ளடக்கப் படவிருக்கின்றது.**

ஆண்டு 6இற்கு மேற்பட்ட வகுப்புக்களில் சமூகக்கல்விப் பாடத் திட்டத்தில் மிதிவெடி விழிப் புணர்வு பற்றிய விடயம் உள்ளதாக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் இராசையா கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் மிதிவெடி அபாயம் எதிர்நோக்கப்படுவதால் இது தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவது அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

"யுனிசெவ்" நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆசிரியர்களுக்கு இது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட இருக்கின்றன.

முதற்கட்டமாக சமூகக்கல்விப் பாடசாலை ஆசிரிய ஆலோசகர்களுக்கான இரண்டுநாள் செயலமர்வு நேற்று முன்தினம் அநுராதபுரத்திலுள்ள விவசாய அறுவடைப் பயிற்சி நிலை யத்தில் ஆரம்பமாகிநேற்றும் இடம்பெற்றது.

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் சமூக காடு வளர்ப்புத் திட்டம் ஆரம்பிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவால் சமூக காடுவளர்ப்புத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு முல்லைத் தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஒன்பதாம் கட்டை மணவாளன்பட்ட முறிப்பு கிராமத்தில் கடந்த ஏழாம் திகதி நடைபெற்றது.

இத்திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு மேழிவனம் பகுதியில் இராணுவத்தால் அழிக்கப்பட்ட விநியோரப் பகுதியினை அண்மித்த காணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென 9ஆம் கட்டைப் பகுதியில் நிரந்தரமாக வசித்துவரும் மக்களில் 10 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தலா ஐந்து ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டு காடு வளர்ப்பை மேற்கொள்வதற்காக ஒரு தொகுதி நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டம் தொடர்பாக வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் கருத்துத் தெரிவிக்கையில் கடந்த காலயுத்தத்தால் பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இழந்த வளங்களை ஈடு செய்வதற்கு இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் தான் நிவர்த்தி செய்யமுடியும். அத்துடன் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்தல் எஞ்சிய வளங்களைப் பேணுதல் என்பவற்றுடன் சமூகத்தினரிடையே வனவளம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இத்தகைய நடவடிக்கைகள் அமையும் எனவும் இதுபோன்ற நடவடிக்கைகள் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். (லோ)

# மிதிவெடி அபாயத்தால் மின் வழங்கல் தாமதம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் மின் விநியோகம் செய்வதற்கு ஏ-9 பாதை சுவையோரங்களில் மிதிவெடி உள்ளமையால் அப்பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம் வழங்க முடியாதுள்ளதாக மின்சாரசபையின் பிரதி பொது முகாமையாளர் கூறியுள்ளார்.

சாவகச்சேரி முதல் கொடிகாமம் வரை மின் வழங்குவதற்கு சகல வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் இதனை வழங்க முடியாதுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். (33)

## சமகால கருத்துரை

புதுக்குடியிருப்பு நகர் வலயத்தின் கோம்பாவில் காட்டாமணக்கு பிள்ளையார் கோவிலுக்கு அருகாக சமகால அரசியல் கருத்துரை நிகழ்வு கடந்த புதன் கிழமை நடைபெற்றது. இந் நிகழ்விற்கு கோம்பாவில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் தனபாலசிங்கம் தலைமை வகித்தார். சமகால அரசியல் கருத்துரையை புதுக்குடியிருப்பு நகர் வலயப் பொறுப்பாளர் இரத்தினம் வழங்கினார். (19)

## வலி. வடக்கில் வீடமைப்புத் திட்டம்

வலி.வடக்கு பிரதேசத்தில் பிரதேச செயலகம் மற்றும் ஜி.ரி.இசற் நிறுவனத்தினாலும் இனங்காணப்பட்ட நான்கு கிராம அலுவலர் பிரிவுகளில் 50 வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு ஜி.ரி.இசற் நிறுவனம் முன்வந்துள்ளது. மல்லாகம் மத்தி, அளவெட்டி வடக்கு ஆகிய பிரிவுகளில் தலா பதின்மூன்று வீடுகளும் இளவாலை வட மேற்கு தெல் லிப்பளை துர்க்காபுரம் பகுதிகளில் தலா பன்னிரெண்டு வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

## விளையாட்டு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவன ஒழுங்கமைப்பில் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனத்தால் நடத்தப்படும் கன்னியன் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா காஞ்சிபுரம் கன்னியன் முன்பள்ளி மைதானத்தில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

## சதுரங்கப் போட்டியில் முதலாமிடம்

2003ஆம் ஆண்டிற்கான வடக்கு-கிழக்கு மாகாண மட்டப் பாட சாலைகளுக்கிடையேயான சதுரங்கப் போட்டியில் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 15 வயதுப் பெண்கள் பிரிவு முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதே பாடசாலையைச் சேர்ந்த 19 வயது ஆண்கள் பிரிவு 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இவ்விரு அணிகளும் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (26)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 27 • 05 • 1978



தாயக மண்ணில் 14 • 07 • 1995

### வீரவேங்கை மன்னன்
### [யோகநாதன் கோகுலன்/கவாஸ்கர்]

**எங்கள் அன்புச் செல்வமே கவாஸ்கர்**
**இன்று நீ எங்களை விட்டுப் பிரிந்து**
**ஈர் நான்கு வருடங்களாகி விட்டதைய்யா**
**எத்தனை ஆண்டுகளானாலும் ஆறவில்லை-எம் துயரம்**
**தமிழீழ மண்ணை மீட்பதற்காய் போராட்டம்**
**தன்னில் இணைந்து யாழ். மண்ணைக் கைப்பற்ற -வந்த**
**எதிரிப்படையை புறமுதுகிட வைத்த புலிப்பாய்ச்சல்**
**தன்னில் வீரகாவியமானாய் எங்கள் மன்னா!**
**வீரப் புலியே உன்கனவு நனவாகும் காலம்**
**வெகு தொலைவில் இல்லையடா**
**நிற்சயம் தமிழீழம் மலரும்.**

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

என்றும் உன் நினைவோடு,
**அம்மம்மா, சித்தப்பா, சித்தி, அண்ணர், அத்தாச்சிமார், அக்காமார், தங்கைமார், போராளிகள், தபோதினி, தரங்கினி.**

நெத்தலியாறு,
விசுவமடு. (3439)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 17 – 02 – 1971



தாயக மண்ணில் 14 – 02 – 1991

### லெப்டினனட் மாக்கிறெட்


(சிற்றம்பலம் சாந்தி)

*வெற்றிலைக் கேணிதனில் அன்று*
*வெஞ்சமராடிய வேங்கையே*
*வென்றெடுத்த பூ மியாமதில் இன்று*
*சிரிக்குதங்கே உன் பூ முகம்.*

14.07.1991 அன்று வெற்றிலைக் கேணியில் கடல் வழியாகத் தரையிறக்கப்பட்ட இராணுவத்துடனான சமரில் வீரச்சாவடைந்தார். இவரையும் இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

**வேம்படி, உடுத்துறை,**
**தாளையடி.** (3429) **குடும்பத்தினர்.**

## 16 ஆம் நாள் நீங்காத நினைவில்



**அன்னை மடியில் 13 – 05 – 1936**

**ஆண்டவன் அடியில் 29 – 06 – 2003**

### மூர்த்தி தாயம்மா

14-07-2003

மழை நாளில் குடையாகி
வெயில் நாளில் நிழலாகி
சிறகுக்குள் எமை பொத்தி
அம்மா! நீங்கள் கவர்ந்திருந்தீர்கள்
காலன் வந்து கவர்ந்தானோ
கலங்கரை விளக்கே...
கருகிய பயிராக நாங்கள்...
கதறுகின்றோம் அம்மா!

**உங்களை விட்டுத்தவிக்கும்**
**மூ.சறோஜா (மகள்),**
**கணக்காளர், 'றீடோ நிறுவனம்**
**தலைமைப் பணிமனை, கிளிநொச்சி.**

(3444)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று மல்லாவி

வழக்கு இலக்கம்:-40/98,
தன்மை: மண நீக்கம்

வடிவேலு சத்தியதேவி,
இல,212, 1ஆம் யூனிற்,
மல்லாவி.

**-வழக்காளி-**

சுந்தரம் வடிவேலு,
இல-212, 1ஆம் யூனிற்,
புகழேந்திநகர்,
மல்லாவி.

**-எதிராளி-**

### பகிரங்க அறிவித்தல்

### இடைக்காலத் தீர்வை

**2003ம் ஆண்டு 06 ஆம் மாதம் 13 ம் திகதி தமிழீழ மாவட்ட நீதியாளர் செல்வி சி.சாதனா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சட்டவாளர் அவர்களும் சமூகமாயிருக்க எதிராளிக்கு அழைப்பாணைச் சேர்ப்பிக்கா மையால் ஒரு முகமாக விளங்கப்பட்டுக் கீழ்க் கண்டவாறு இடைக்காலத் தீர்வை வழங்கப்பட்டது. இதன் படி வழக்காளிக்கும், எதிராளிக்கும் 1985 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2ம் திகதி நடைபெற்ற திருமணப்பதிவை இரத்துச் செய்து வழக்காளியும், எதிராளியும் முன்பிருந்த சட்ட நிலையை அடைவார்கள் என்றும் உரிமைக் கோரிக்கையின் படி 03 பிள்ளைகளுக்குமான பராமரிப்புப் பணமாக ரூபா 125,000 /= வையும்,பிரிமனைப்பணமாக 25,000/= ரூபாவையும் வழங்குவதுடன் வழக்காளிக்கு ஏற்பட்ட வழக்குச் செலவுடன் மன்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கியுள்ளதன்படி இடைக்காலத் தீர்வையாக்கப்படு கின்றது.**

**இவ் இடைக்காலத் தீர்வை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து 21 நாட்களுக்கு எதிராளியோ, உரித்துடையோரோ மன்றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளவும், தவறும் பட்சத்தில் குறித்த இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.**

"மன்றின் கட்டளைப்படி"

பதிவாளர்
தமிழீழ் மாவட்ட
நீதிமன்று.
மல்லாவி.

வரைபு:- வழக்காளி சட்டவாளர்,
செல்வி கு.சுமதி.
மல்லாவி. (3441)

# அதிகாரக் கனவுகள் நனவாகுமா?

ஏதோ ஒரு வகையில் தம்மை அரசியல் வாதிகளாக முத்திரை குத்திக் கொண்டிருக்கும் அக்கால பயங்கரவாத செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்த மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி.யினர் அண்மையில் பிரபல்யம் வாய்ந்ததும் பரம்பரை அரசியல் கட்சியானதுமான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் தம்மை இணைத்துக் கொள்ள மிகப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளனர். தொடர்ந்தும் முயன்று வருகின்றனர்.

எனினும் சுதந்திரக் கட்சி தற்போது பல இடதுசாரி கட்சிகளுடன் இணைந்து பொதுசன ஐக்கிய முன்னணி என்ற பெயருடன் செயற்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே.

அந்நாட்களில் இரண்டு முக்கிய கட்சிகளாக ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே இருந்துள்ளன. எனினும் அன்றிலிருந்தே அதிகாரப் போட்டி காரணமாக ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றுள் சில தலைவர்களின் மரணங்களினால் ஏற்பட்டவை இன்னும் சில அதிருப்தியாளர்களின் செயற்பாடுகளால் மாற்றம் பெற்றவையாகின.

அதிருப்தியாளர்களினால் ஏற்படும் ஆட்சி மாற்றங்களே உலகில் அதிகமாகக் காணப்படுவது கண்கூடு. இந்த வகையில் சிறிலங்காவிலும் அதிருப்தியாளர்களுக்கு குறைவு இருக்கவே முடியாது. ஆயினும் தற்போது ஆட்சியிலிருக்கும் ஐ.தே. முன்னணி அரசு இம்முறை (2001 டிசம்பர்) நடந்த தேர்தலிலேயே கூட்டணி பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. காரணம் மொத்த வாக்குகளில் ஜே.வி.பி. கணிசமான வாக்குகளைப் பெற்றமையே.

ஆனால் இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு தடவையும் கூட்டணி சேர்த்தே ஆட்சியைக் கைப்பற்றியது. ஜே.வி.பி.க்கு முன்பு அது (சிறில.சு.க.) லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்றவையோடு கூட்டுச் சேர்ந்து தற்போதும் தொடர்ந்து கூட்டணி செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு கூட்டணி அமைக்கும் போது கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை கட்சியினருக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை தவிர்க்க முடியாததாகிறது.

இவ்வாறான தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு தாமும் அரசியல் கட்சியென்ற வகையில் கூட்டணியமைக்க முண்டியடித்து தம்மால் இயலக்கூடிய அனைத்து வழிகளையும் கையாண்டு பொ.ஐ.மு. அரசுக்குள் தமது தலையை திணித்துக் கொள்ளப்படாத பாடுபடுகிறது ஜே.வி.பி.

இந்த ஜே.வி.பி. யினுடைய கூட்டணியை சிறி.ல.சு.கட்சியின் முக்கிய பிரமுகரான அநுரா பெரிதும் வரவேற்கின்றார். காரணம் இதன் மூலம் ஆட்சி கைப்பற்றப்பட்டால் தமக்கு அதிகாரம் மிக்க ஒரு பதவி கிடைத்து விடும் என்ற நப்பாசை எனினும் பொ.ஐ. முன்னணிக்குள் அங்கம் வகிக்கும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளைச்





சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் இதற்கெதிராகப் போர்க்கொடி எழுப்புகின்றனர். அதற்கும் காரணம் இல்லாமலில்லை. அதாவது எதிர்காலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பொ.ஐ.மு. அரசு பதவிக்கு வரும் போது தமக்குக் கிடைக்கும் அதிகாரங்கள்-பதவிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டி ஏற்படும் அச்சம். எனினும் ஐ.தே.மு. அரசை கவிழ்க்க வேண்டுமாயின் ஜே.வி.பி.யினது தோழமையும் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக உள்ளது. ஏனெனில் இடதுசாரிகளின் கூட்டணியோடு கூட கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வர முடியாத சிறில.சு.க. தனித்து நின்று போட்டியிட்டு பெரும் பான்மை யோடு வெற்றி பெறமுடி யாது. இந் நிலையில் நாங்கள் கைகொடுப்போம். ஆட்சியை கலைத்து தேர்தலை நடத்துங்கள் நாமும் கூட்டுச் சேருகிறோம் என்று கூறிக் கொண்டிருக்கும் ஜே.வி.பி.யின் கூட்டு பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது.

1988 காலப்பகுதி இந்திய அமைதிப் படை என்று வந்து பல தமிழ் மக்களையும் அவர்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளையும் அழித்த இந்திய இராணுவத்தை வேறு வகையில் குற்றம் சுமத்தி நாடு கடத்த சிறில.சு.கட்சியோடு இணைந்து செயற்பட்டது. எனினும் இதே கட்சி ஆட்சியிலிருந்த போது 1971ஆம் ஆண்டுகளில் இந்திய அரசின் உதவியுடனேயே ஜே.வி.பி. கிளர்ச்சிவாதிகளைக் கட்டுப்படுத்தியது. யாவருக்கும் நினைவிருக்கலாம்.

ஆயினும் தற்போது பொ.ஐ. முன்னணிக்



குள் கூட்டுச் சேரத் துடிக்கும் ஜே.வி.பி.யினது உள்நோக்கமும் புரியாத ஒன்றல்ல அண்மைக்காலங்களில் கட்சிப் பிரமுகர்களின் உரையாற்றல்களிலிருந்து தாமும் இந்நாட்டில் பிரதமராகவோ நிறைவேற்று அதிகார மிக்கதொரு சனாதிபதியாகவோ ஆட்சிபீடம் ஏறிவிட வேண்டும் என்ற ஆசை வெளிப்படுகிறது. கூட்டணி ஒன்றுக்கே பெரும்பாடுபடும் ஜே.வி.பி. தனியாக ஆட்சியதிகாரத்தை அமைக்க முடியுமா என்பது பெரும் வினாவல்ல.

இவ்வாறு பல இடர்பாடுகளையும் தடைகளையும் தாண்டி வெற்றிகண்டு கூட்டணி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டால் அடுத்த கட்ட ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளும் விளைவுகளும் ஹிட்லருக்கு ஏற்பட்ட அனுபவத்தையே ஏற்படுத்தக் கூடும்.

ஜேர்மனியைக் கைப்பற்றியவுடன் "நாசி" என்ற கட்சியை உருவாக்கி அரசியல் நடவடிக்கைகளில் அன்று ஹிட்லர் ஈடுபட்டு வந்தார். அத்துடன் ஜேர்மனிய எதிர்க்கட்சியோடு இணைந்து கூட்டு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டு தீவிர பிரச்சார வேலைகளில் ஈடுபட்டார். இவரின் தீவிர பிரச்சாரத்தின் விளைவாக ஆளும் கட்சி கவிழ்க்கப்பட்டு எதிர்க்கட்சி வெற்றி பெற்றது. அதன் பின்பு அங்கு ஏற்பட்ட ஒப்பந்த மீறல்களால் பல பிரச்சினைகள் எழுந்தன. தம்மை ஒரு கதா நாயகனாக அறிவித்துக் கொண்டு பல பிரச்சார மேடைகளில் உரையாற்றி தேர்தலில் வெற்றி பெறச் செய்த ஹிட்லருக்கு ஆட்சியதிகாரம் வழங்கப்படாமல் போனது.

இதே நிலை நாளை ஜே.வி.பி. கட்சியினருக்கும் ஏற்பட்டுவிடக் கூடும். காரணம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தமது பரம்பரைச் சொத்தாகவே அநுரா எண்ணுகிறார். அத்தோடு தலைமைப் பொறுப்புகளும் தந்தைக்குப் பின் தாய் தாய்க்குப் பின் சகோதரி சகோதரிக்குப் பின்பு தானே அதன் தலைமைப் பொறுப்பையும் ஏற்று உயர் பதவியையும் வகிக்க வேண்டும் என்பது அநுரா பண்டாரநாயக்கவின் கனவாக உள்ளது. எனவே ஆட்சிக் கவிழ்ப்புக்கு மட்டுமே தமது கூட்டணி தேவைப்பட்டு விட்டது என ஜே.வி.பி. பின்னர் ஹிட்லரைப் போல வருந்த வேண்டியேற்படலாம்.

ஆயினும் தற்போது சிறிலங்காவில் ஏற்பட்டு வரும் பல ஊழல்கள் மோசடிகள் நடைபெறுவதை நோக்கும் போது இதற்கும் ஒரு வகை அதிகாரமும், பதவியும் தேவைப்படுவதாகவே தெரிகின்றது. காரணம் அண்மைக் காலங்களில் சிறிலங்காவில் ஆளும் கட்சியினரே பொலிசாரைத் தாக்கி குற்றவாளிகளை விடுவித்தமை எதிர்க்கட்சி அரசியல் வாதிகளைக் கொலை செய்துவிட்டு தப்பித்துக் கொள்ளுதல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆகவே அரசியலில் பெரும் பதவி ஒன்று ஜே.வி.பி.க்கு கிடைத்துவிட்டால் அது பெரும் வரப்பிரசாதமாகும்.

இந்நிலையில் கூட்டணி அமைத்தல் விடயத்திலும் ஒன்றுக்கொன்று நேரடியான எதிர்ப்புக்களும் தோன்றுவதாகவே காணப்படுகின்றன.

கூட்டணிக்கு பல இடதுசாரித் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தே வருகின்றனர். சந்திரிகாவும் முன்னர் இருந்த நிலையிலிருந்து சற்று இறுக்கமான நிலையில் இருப்பதாகவும் படிப்படியாகத் தெரிய வருகிறது. இந்நிலையில் அநுராவின் நீண்டநாள் ஆசை நிறைவேறாமல் போய்விடுமா ஜே.வி.பி. கூட்டணி சேர்ந்து பெரும் பதவி வகிக்குமா என்பதை காலந்தான் பதில் சொல்லும். □

உப்புள் ஜோசப் பர்ணாந்து (லங்காதீப)
மொழியாக்கம்: **வடிவேல்**

---

-கிளிநொச்சி மாவட்டத்தில்-

## மீள் குடியமர்வு நிதியாக ரூ 25,000 6,200 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து மீண்டும் மீளக் குடியேறிய மக்களில் இதுவரை 6200 குடும்பங்களுக்கு 155 மில்லியன் ரூபா மீள் குடியமர்வு நிதி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாகத் தமது சொந்த வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளில் பெரும் கஸ்ர நிலைகளில் வாழ்ந்து தற்போது மீண்டும் குடியேறி உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு குடும்பத்துக்குத் தலா 25000 ரூபா வீதம் மொத்தமாக 6200 குடும்பங்களுக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 200 குடும்பங்களுக்கும் ஏப்ரல் மாதம் 787 குடும்பங்களுக்கும் மே மாதம் 2013 குடும்பங்களுக்கும் ஜூன் மாதம் 2000 குடும்பங்களுக்கும் ஜூலை மாதம் 1200 குடும்பங்களுக்கும் இதுவரை மொத்தம் 155 மில்லியன் ரூபாய் நிதி மீள்குடியமர்வு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மீள்குடியமர்ந்த மக்களுக்கான ஜீவனோபாய உதவிக் கொடுப்பனவுகள் மீள் குடியமர்வு நிதிக்கு விண்ணப்பித்த ஒழுங்குகளில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

## மதுப் பிரியர்களின் அடாவடியால் பொதுமக்கள் பெரும் விசனம்!

உடையார்கட்டுப் பகுதியில் பிரதான வீதியில் அமைந்துள்ள மதுபான நிலையப் பகுதியால் செல்லும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் அச்சத்திற்கும் முகம் கொடுக்கின்றனர்.

மதுபான நிலையத்தில் மது அருந்திவிட்டு பலர் மதுபோதையில் மக்களுக்கு இடையூறாக செயற்படுவதுடன் தகாத வார்த்தைகளாலும் தாராளமாகப் பேச முனைகின்றனர். இதனால் பெண்கள் [illegible] கூச்சத்துடனேயே அவ்விடத்தால் செல்ல வேண்டியுள்ளது. அதேபோல் சிறுவர்கள் அச்சத்துடன் செல்கின்றனர். பிரதான வீதிப் பகுதியில் செல்லும் ஊர்தி போக்குவரவு இடையூறு, விபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களையும் மதுபோதைக்கு ஆளானவர்களால் உருவாக்கப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

## வெளிநாட்டு நிபுணர்களின் சேவை தொடர்ந்தும் இடம்பெற ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

தியாகதீபம் திலிபன் நடமாடும் மருத்துவ சேவையினராலும் வெளிநாட்டிலிருந்து வருகைதந்திருக்கும் பல் மற்றும் இருதய வைத்திய நிபுணர்களினாலும் மக்களின் நலன் கருதி பல்வேறுபட்ட சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 07ஆம் திகதி ஐயன் குளத்தில் 25 பேருக்கான பற்சிகிச்சையும், 08ஆம் திகதி அளம்பிலில் 86 பேருக்கு பற்சிகிச்சையும், 09ஆம் திகதி ஆழியவளையில் 249 பேருக்கும் ஆக 360 நோயாளர்களுக்கு பற்சிகிச்சையும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிகமாக இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நோயாளர்களுக்கான விசேட இருதய சிகிச்சைகளும் வழங்கப்பட்டுள்ளதுடன் பொது வைத்திய சிகிச்சைகள் மருத்துவ ஆலோசனைகள் என பல்வேறுபட்ட மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகைய மருத்துவ சிகிச்சைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திலீபன் மருத்துவ சேவையினர் தெரிவித்துள்ளனர். (லோ)

## தையல் பயிற்சி நிலையம் ஆண்டான்குளத்தில் அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி உதவியுடன் மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் ஆண்டான்குளம் கிராம மக்களின் நன்மைகருதி தையல் பயிற்சி நிலையம் ஒன்றை அமைத்துள்ளது.

தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் பயிற்சி நிலையத்தினை மன்னார் மாவட்ட புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் செ.சீசர் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பல்வேறு துறை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

ஆண்டான்குளம் பகுதியில் தையல் பயிற்சி நிலையம் திறக்கப்பட்டதால் மக்கள் மத்தியில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி பொருளாதார ரீதியாக இப்பகுதியை வளர்ச்சி அடையச் செய்யும் நோக்கிலே இத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக புனர்வாழ்வுக்ள கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (லோ)

- மாகாண மட்டத்திலான -

## தமிழ்த்தினப் போட்டிகள் யாழ். இல் நடைபெற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடத்துக்கான வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்திலான தமிழ் மொழித்தின விழா நிகழ்வுகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளன.

தமிழ் மொழித்தின விழா கடந்த பதின்மூன்று ஆண்டு காலத்தின் பின்னர் யாழ். மாவட்டத்தில் நடைபெறுவதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் 25,26ஆம் திகதிகளில் மாகாண மட்டப் போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

# பயணியர் பேருந்துப் புதிய பணி
## (புதுக்குடியிருப்பு, தாளையடி -பருத்தித்துறை

புதுக்குடியிருப்பு, விசுவமடு, பரந்தன், இயக்கச்சி, புதுக்காட்டுநகர், தாளையடி, பளை, பருத்தித்துறை வழித்தடத்தில் 15.07.2003 ஆம் நாளில் இருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனைப் பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

நேர ஒழுங்கு:

**புதுக்குடியிருப்பு - தாளையடி - பருத்தித்துறை**

| புதுக்குடியிருப்பு | விசுவமடு | பரந்தன் | புதுக்காட்டுநகர் | தாளையடி | முகமாலை(பளை) | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|
| காலை06.00 | 07.00 | 08.00 | 08.25 | 08.40 | 09.15 | 12.00 |


**பருத்தித்துறை - தாளையடி - புதுக்குடியிருப்பு**

| பருத்தித்துறை | முகமாலை (பளை) | தாளையடி | புதுக்காட்டுநகர் | பரந்தன் | விசுவமடு | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|---|
| பகல் 01.30 | 04.15 | 04.50 | 05.05 | 05.30 | 06.30 | 07.30 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப்பணியகம்,
புதுக்குடியிருப்பு.

(சி-8419)

# தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப் புதிய பணி



இளமருதங்குளம், புரிசங்குளம், சேமமடுநகர், மாளிகை, புளியங்குளம் வழித்தடத்தில் 15.07.2003ஆம் நாளிலிருந்து மேற்படி பேருந்துப்பணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனைப் பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:

**இளமருதங்குளம் - புளியங்குளம்**

| இளமருதங்குளம் | சேமமடுநகர் | புளியங்குளம் |
|---|---|---|
| காலை 07.00 | 07.45 | 08.00 |

**புளியங்குளம் - இளமருதங்குளம்**

| புளியங்குளம் | சேமமடுநகர் | இளமருதங்குளம் |
|---|---|---|
| காலை02.30 | 02.45 | 03.30 |

முகாமையாளர்,
கிளிநொச்சி.
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி-8418)

# பாடசாலைப் பேருந்துப் பணி
## தமிழீழப் போக்குவரவுக் கழகம்



முறிகண்டி, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி, கரடிப்போக்கு நகர் வழித்தடத்தில் 15.07.2003 ஆம் நாளிலிருந்து மேற்படி பேருந்துப்பணி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை மாணவர், ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:

**முறிகண்டி - கிளிநொச்சி**

| முறிகண்டி | கனகாம்பிகைக்குளம் | கிளிநொச்சி |
|---|---|---|
| காலை 07.00 | 07.25 | 07.50 |

**கிளிநொச்சி - முறிகண்டி**

| கிளிநொச்சி | கன்காம்பிகைக்குளம் | முறிகண்டி |
|---|---|---|
| பகல்02.20 | 02.45 | 03.10 |

*குறிப்பு:-* இப்பேருந்தில் பாடசாலை மாணவர், ஆசிரியர் மட்டுமே பயணிக்கலாம்.

முகாமையாளர்,
கிளிநொச்சி.
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி-8418)



சிந்தனைக்கு

நாம் அரசியல்வாதிகளல்லர் ;
நாம் புரட்சிவாதிகள்.

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 14-07-2003

## இடைவெளி அதிகம்!

"எங்கள் தந்தையாரைக் கொன்றவர்களுடன் கூட்டணி வைத்துக் கொள்ளுதல் வேண்டாம்" என சனாதிபதி சந்திரிகாவின் பிள்ளைகள் தாயாரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் ஊர்ஜிதம் செய்யக்கூடியதொன்றாகவே உள்ளது. ஏனெனில், விஜயகுமாரணதுங்காவின் பிள்ளைகள் இவ்வாறு கோருவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

ஏனெனில், விஜயகுமாரணதுங்கா ஓர் அரசியல்வாதியும் அல்ல. அதிகாரத்தின் சுவையை அறிந்தவரும் அல்ல. அவர் ஒரு நடிகர். ஓரளவு நல்ல உணர்வுகளை வெளிப்படுத்தியவர். பண்டாரநாயக்க குடும்பத்தில் திருமணம் செய்து கொண்டமை ஒரு தற்செயலான நிகழ்வு. இதனால், அவரின் அரசியல் 'அனுபவமின்மை' அதாவது அரசியல் சூழ்ச்சிகள், சதிகள் என்பனவற்றை அவர் புரிந்து கொள்ள முடியாமல் போனமையால் ஜே.வி.பி.யினரிடம் இலகுவாக அவர் சிக்கிக் கொள்ள நேரிட்டுவிட்டது.

வேறொரு விதத்தில் கூறுவதானால், சந்திரிகா குமாரணதுங்கவை திருமணம் செய்து கொண்டமையினாலேயே அவர் அரசியலில் ஈடுபாடு காட்டும் நிலை உருவாகியதெனலாம். அவ்வாறு இல்லாதுவிடில் அவர், நடிகராகவே தனது ஆயுட்காலம் முழுவதையும் கடத்தியிருக்கக் கூடும். ஆகையினால், சந்திரிகாவுடனான திருமணபந்தமே அவரை அரசியலில் ஈடுபடவும். அதன் விளைவாகவே அவர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இலக்காகி, தமது வாழ்க்கையை முடித்துக் கொள்ளவும் வேண்டியதாகியது.

ஆனால், சந்திரிகாவின் வரலாற்றுப் பின்னணி அப்படியானதல்ல. அவர் இலங்கையை ஆண்ட இரண்டு பிரதமர்களின் மகள். பண்டாரநாயக்க குடும்பத்தின் வாரிசு. அதிகாரத்தின் சுவையை சிறுபிராயத்தில் சுவைத்தறிந்தவர். பண்டாரநாயக்க குடும்பம் சில வேளைகளில் அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்ட விதத்தில் கூட அதிகாரத்தைப் பயன்படுத்தியதுண்டு. இதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்தும் கொண்டார்கள். எடுத்துக் காட்டாக, 1975இல் பதவியில் இருந்து விலக வேண்டிய சந்திரிகா குமாரதுங்கவின் தாயாரான சிறிமாவோவின் அரசாங்கம் மேலும் இருவருடங்கள் (1977வரை) பதவியில் இருந்ததைச் சுட்டிக் காட்டமுடியும்.

இதேவேளை, சந்திரிகா குமாரதுங்கவும், பாராளுமன்ற பதவிக்காலம் ஒன்றையும், சனாதிபதி பதவிக்காலம் ஒன்றையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளதோடு இரண்டாவது சனாதிபதி பதவிக்காலத்தையும் தொடர்ந்து கொண்டிருப்பவர். இக்காலப் பகுதியில் தமது குடும்பத்தினருக்கே உரித்தான வகையில் அரசியல் அதிகாரத்தைத் தனது இஷ்டத்திற்கு ஏற்ப பயன்படுத்தியவர். மக்களின் அடிப்படை உரிமைகளை அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மதிக்காத வரையில் அரசியல் அதிகாரத்தின் மூலம் அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டவர். தந்தையார் சிங்களம் மட்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து தமிழ் மொழியை இரண்டாம் நிலைக்கு தள்ளியவர் எனின், தாயார் அரசியல் யாப்பு ரீதியாக தமிழ் மக்களுக்கு இருந்த பாதுகாப்பை இல்லாது ஒழித்தவர். மகள் சந்திரிகாவோ இது வரையில் இல்லாதவாறு தமிழ் மக்கள் மீது பெரும் போரைத் தொடுத்தவர்.

அதுமாத்திரமல்ல, தமது குடும்ப அங்கத்தவர்களின் துயரமான முடிவுகளில் இருந்து அரசியல் ஆதாயம் தேடிக் கொள்வதிலும், இவர்கள் பின்நிற்கவில்லை. குறிப்பாக பண்டாரநாயக்கவின் இறப்பில் அவரது மனைவியான சிறிமாவோ பண்டாரநாயக்க ஆதாயம் தேடிக் கொண்டார். தனது தந்தையினதும், கணவனதும் இறப்பை சந்திரிகா குமாரதுங்க அரசியல் மூலதனமாக்கி இலாபம் ஈட்டிக் கொண்டார்.

இதற்கு மாறாக அரசியலில் இலாபம் ஈட்டும் நோக்கில் அரசியல் விரோதங்கள், முரண்பாடுகள் என்பவற்றை ஓரந்தள்ளிக் கூட்டணிகளை அமைத்தும், கட்சி மாறிச் செயற்பட்டமைக்கும் உதாரணங்கள் உண்டு. எடுத்துக் காட்டாகப் பண்டாரநாயக்கவின் ஒரே ஆண் வாரிசான அநுராபண்டாரநாயக்க ஐ.தே.கட்சியுடன் சேர்ந்திருந்தமையும், சந்திரிகா குமாரதுங்கவின் பொ.ஐ.முன்னணி ஜே.வி.பி.யின் ஆதரவு பெற்றுத் தமது அரசாங்கத்தின் ஆட்சியை நீடிக்க முற்பட்டமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

இத்தகையதொரு நிலையில் ஆட்சிக் கவிழ்ப்பொன்றிற்கும் தமது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் தீவிர பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது கணவரைக் கொன்றவர்கள் என்பதை மறந்து ஜே.வி.பி.யுடன் உறவாட நினைப்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. அதிகாரத்தின் சுவை என்பது உறவுகளையும், கோட்பாடுகளையும் கடந்து / மறந்து ஆதிக்கம் செலுத்தக் கூடியதொன்றாகும்.

ஆனால், விஜய குமாரணதுங்கவின் பிள்ளைகளுக்கு இவ் அரசியல் பாரம்பரியமோ அன்றி அதிகாரத்தின் சுவையோ முற்றிலுமாக அறியப்பட்டதாக இருக்கவாய்ப்பில்லை. ஆகையினால், அவர்கள் உணர்விற்கும், உணர்ச்சிகளுக்கும் இடம் கொடுத்துத் தமது தாயாரிடம் இக் கோரிக்கையை விடுத்திருக்கலாம். ஆனால் சனாதிபதி சந்திரிகா இக் கோரிக்கைக்கு மதிப்பளித்துச் செயற்படுவாரா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், பண்டாரநாயக்கவின் குடும்பத்திற்கும்–விஜயகுமாரணதுங்கவின் குடும்பத்திற்குமிடையில் அடிப்படையிலேயே நிரம்ப இடைவெளியும் வேறுபாடும் உண்டு. வேறொரு வகையில் கூறுவதாயின் சந்திரிகா குமாரணதுங்கவின் பிள்ளைகள் விஜயகுமாரதுங்கவின் குடும்பப் பண்புகளைப் பிரதிபலித்து விட்டனர் என்றே கூறலாம்.

# விசேட பொலிஸ் ரோந்துச் சேவை பிரதான நகரங்களில் விரைவில் அமுல்!

## குற்றச் செயல்களை ஒழிக்கும் நடவடிக்கையாம்

(கொழும்பு)

அதிகரித்து வரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான விசேட பொலிஸ் ரோந்து சேவை நாட்டின் பிரதான நகர்களில் விரைவில் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் முதல் நடவடிக்கையாக பம்பலப்பிட்டி, ஹிருலப்பனை மற்றும் நாரஹேன் பிட்டி ஆகிய பொலிஸ பிரிவுகளில் சைக்கிள் பொலிஸ் ரோந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். இதேவேளை விசேட பொலிஸ் ரோந்து சேவை மேல் மாகாணத்தில் உள்ள சகல நகரங்களிலும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த விசேட பொலிஸ் ரோந்து சேவை குற்றச் செயல்கள் அதிகம் இடம்பெறும் பகுதிகளில் இரவு பகலாக நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களில் மோசடி புரிந்த பௌத்த பிக்கு இரகசியப் பொலிசாரால் கைது!

(கொழும்பு)

அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களின் இலக்கங்களை மாற்றி மோசடி செய்து இலட்சக்கணக்கான ரூபாவை பெற்றுக் கொண்ட முன்னாள பௌத்த பிக்கு ஒருவரையும் அவரது உதவியாளர் ஒருவரையும் இரகசியப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் இருந்து தேசிய லொத்தர் சபையால் வெளியிடப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்தோடு பௌத்த விகாரையில் வைக்கப்படுகின்ற பல புராதன சின்னங்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களின் இலக்கங்களை மாற்றி மோசடி செய்வதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் பலவற்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி பிக்கு தனது காதலியின் வீட்டில் தங்கியிருந்த போதே பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஏ–15 பிரதான வீதியைத் திறக்க பிரதமருக்கு மகஜர் கையளிப்பு!

கிண்ணியா மூதூர் ஊடாகச் செல்லும் திருமலை மட்டக்களப்பு வீதியை (ஏ-15) போக்குவரத்துக்கு திறந்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிண்ஸ்வோ அமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களான திலக் மாரப்பன, ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது.

அம்மகஜரில் சமாதானத்துக்குப் பின்னர் பல வீதிகள் திறக்கப்பட்டுள்ளன. திருமலையில் இருந்து மிகக் குறுகிய தூரத்தில் மட்டக்களப்புக்கு செல்லக் கூடிய இவ் வீதி மாத்திரம் திறக்கப்படாது இருப்பது கவலைக்குரியது.

உத்தியோக பூர்வமாக இவ்வீதி போக்குவரத்துக்கு திறக்கப்படாத போதிலும், சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் சிறிது காலம் பயன்படுத்தப்பட்டது. தற்போது அது தடைப்பட்டுள்ளது.

எனவே இவ் வீதியைப் புனரமைப்புச் செய்து மீண்டும் உத்தியோக பூர்வமாகத் திறந்த விடுவதால் அப்பகுதி மக்களின் சிரமத்தைப் போக்குவதாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் தூதரக அதிகாரி மட்டக்களப்பு விஜயம்!

(கொழும்பு)

பாகிஸ்தானிலுள்ள பிரான்ஸ் தூதரகப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரி கேர்ணல் ஜீன்பியரே ரெஸ்ரெக் இம் மாதம் 21ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இவர் இவ் விஜயத்தின் போது, இராணுவ, பொலிஸ் அதிகாரிகள், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை மின்னேரியா வில் உள்ள 25ஆவது படைப்பிரிவுத் தளபதி மேஜர் ஜெனரல் பாலசூரியவையும் இவர் சந்திக்கவுள்ளார்.

# வடக்கு – கிழக்கு மருத்துவ மாதுக்களின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மற்றும் மலையக பிரதேசங்களில் நிலவும் மருத்துவ மாதுக்களின் வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு சுகாதார போஷாக்கு நலன்புரித்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது.

மேற்படி பிரதேசங்களில் பொதுத் தராதர சாதாரணதர கல்வித் தகைமையைக் கொண்டிருப்பவர்களைக் கொண்டு இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு திட்டமிட்டிருப்பதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த விசேட ஏற்பாட்டின் மூலம் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகப் பிரதேச வெற்றிடங்கள் நிரப்பப்படும் எனவும் அவ் அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# மறுபிறப்பிலாவது சிறப்பான வாழ்வை வாழ விரும்புகின்றேன் - மைக்டைசன் கருத்து

பயனில்லாத உருப்படியில்லாத வாழ்க்கையை வாழும் தான் சாக விரும்புவதாகவும் மறு ஜென்மத்திலாவது சிறப்பான வாழ்க்கை வாழ விரும்புவதாகவும் குத்துச்சண்டை வீரர் மைக்டைசன் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இரண்டு மணி நேரம் அளித்த பேட்டியில் பல்வேறு குணாதிசயங்களை வெளிப்படுத்திய டைசன், அடுத்த ஜென்மத்திலாவது சிறப்பானதொரு வாழ்க்கை வாழ விரும்புவதாகவும், உருப்படியில்லாத யாருக்கும் பலனில்லாத தன்னுடைய வாழ்க்கையை எண்ணி வெறுத்துப் போய் சாக விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

எனது வாழ்க்கை சர்ச்சைகள் நிறைந்ததாகிவிட்டது. இதனால் இந்த சமூகம் என்னை வெறுக்கின்றது. குத்துச் சண்டை உலகில் சிறந்த வீரனாக இருந்தாலும் கோடிக்கணக்கான பணத்தை சம்பாதித்தாலும் எனது வாழ்க்கை சர்ச்சை நிறைந்ததாகவே இருக்கிறது. எனது உடலின நிறத்தைப் போலவே தலைவிதியும் எழுதப்பட்டுள்ளது எனத் தெரிவித்த டைசன், நான் ஒரு இரக்க மற்றவன் என்னிடம் இரக்கம் என்பதே கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.






# தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் முரளிதரன்

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் தரப்படுத்தலில் சுழல் பந்துவீச்சாளர் முரளிதரன் பந்து வீச்சில் மேலும் ஒருபடி உயர்ந்துள்ளார்.

அண்மைய தரப்படுத்தலில் அவர் 893 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெறுகிறார். இரண்டாவது இடத்தை 884 புள்ளிகளைப் பெற்று அவுஸ்திரேலிய வீரர் மெக் ராத் வகிக்கிறார். 883 புள்ளிகளைப் பெற்று தென்னாபிரிக்க வீரர் சேன்பொலக் மூன்றாம் இடத்திலும், சிறிலங்காவின் வேகப் பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் 805புள்ளிகளுடன் நான்காம் இடத்திலும் உள்ளனர்.

- மேஜர் முரளி ஞாபகார்த்த உதைபந்தாட்டம் -

# சுவிஸ், மட்டு. தலா இரு அணிகள் இறுதிப்போட்டிகளுக்குத் தெரிவு

சுவிஸ் தமிழர்களின் தாயக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகளுக்கு சுவிஸ் மற்றும் மட்டு. அணிகள் தலா இரு பிரிவுகளில் தெரிவாகியுள்ளன.

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக கனிஷ்ட பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியின் நான்கு அரையிறுதிப் போட்டிகள் நேற்று கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

முன்னதாக தேசியக் கொடியை கிளி.மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். கரைச்சிப் பிரதேச விளையாட்டலுவலர் மேஜர் முரளியின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்தார்.

காலை நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவுப் போட்டியில் சுவிஸ் அணி6-0 என்ற கோல் கணக்கில் திருமலை அணியை வென்றது. நவஜீவன் 3 கோல்களையும், நிசாத்இருகோல்களையும், தர்சன் ஒரு கோலையும் போட்டனர்.

17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவுப்போட்டியில் திருமலை அணி அம்பாறை அணியை 3-1 என்ற கோல்கணக்கில் வென்றது. திருமலை அணியின் சார்பில் M.பவாஸ் இருகோல்களையும், S.பிரபாரஜீவ் ஒரு கோலையும், அம்பாறை அணியின் சார்பில் A.M.இம்ரான்கானும் போட்டனர்.

பிற்பகல்13 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவுப் போட்டியில் மட்டு. அணி 3-0 என்ற கோல் கணக்கில் மன்னார் அணியை வென்றது. ந.சாந்தன் இருகோல்களையும், றே.பல்தசார் ஒரு கோலையும் போட்டனர்.

19 வயதுக்குட்பட்டோருக்கான மிகவும் பரபரப்பான போட்டியில் மன்னார் அணி சுவிஸ் அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வென்றது. மன்னார் அணியின் சார்பில் D.L. அல்போன்ஸ் 3 கோல்களையும், சியாந்தன் ஒருகோலையும், சுவிஸ் அணியின் இருகோல்களையும் துவாரகனும் போட்டனர்.

## பொ.ஐ.மு. வின் செயற்குழு கூடுகிறது

பொ.ஐ.முன்னணியின் சிறப்பு செயற்குழுக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. சி.சு.கட்சிக்கும் ஜே.வி.பி.க்குமிடையிலான உடன்பாடுகள், முரண்பாடுகள் குறித்து கலந்துரையாடலே இந்தக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### விடுதலைப்...

மீது அழுத்தம் கொடுக்கப்படுகிறதா என்பது குறித்து மட்டுமே அரசு கவனம் செலுத்தி வருகிறது.

நோர்வேயின் குடிவரவுத் திணைக்களமும் இவரது கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் இந்த செவ்வி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### வெளிமாவட்டங்க...

பங்கள் நண்பர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கின்றனர்.

இதனால் கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவுப் பகுதிகளில் 20000க்கு மேற்பட்ட குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர். (33)

### மக்கள்...

அதிகாரி இல்லை என்று கூறினார். அடுத்தகட்டமாக நாம் போர்நிறுத் தக் கண்காணிப்புக்குழுவிற்குத் தெரிவித்தோம். தாங்கள் நேரடியாகச் சென்று பார்ப்பதாக எமக்குப் பதிலளித்தனர் என அவர் மேலும் கூறினார்.

### எறிகணை..

கொளுத்தும் போதே மேற்படி எறிகணை வெடித்தது. இது கடந்த இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் ஏவப்பட்ட எறிகணை என்பது குறிப்பிடத் தக்கது.

### ஏ-9 வீதியில்..

பற்றிய அறிவின்மையும் காரணமாக அமைவதோடு வீதிஒழுங்கு முறைகளுக்கு அமைய பயணிக்காமையுமே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்கள் தொடர்பான விசாரணைகள் யாவும் கிளி.நகர வீதிப் போக்குவரத்துப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.(லோ)

### வீரச்சாவு...

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

இவ் அறிவித்தல் நேற்று முன்தினம் வீரச்சாவடைந்தார் என்பதற்குப் பதிலாக சாவடைந்தார் என வெளிவந்திருந்தது.

### இஸ்ரேலிடமிருந்து...

ள்ளதாக ஐ.தே. முன்னணி அரசு கூறிவருகிறது. இந்நிலையில் அரசு சமாதான நடவடிக்கைகளை ஓரங்கட்டிவிட்டு இவ்வாறு ஆயுதக்கொள்வனவில் ஈடுபடுவது தமிழ்மக்கள் தரப்பில் பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது என்றும் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறியுள்ளார்.

### சிறிலங்காக்....

வனவுசெய்ய முடிவுசெய்யப்பட்டது.

இஸ்ரேல் எம்.கே.44 புஸ்மாஸ்ரர் 15 பீரங்கித்தொகுதிகளுக்கு 12.3 மில்லியன் டொலர்களைக் கோரியிருந்தது. இதில் 33,000 டொலர்கள் அவற்றைப் பொருத்துவதற்கான செலவாகும்.

இதேவேளை அமெரிக்க நிறுவனம் ஒன்று இவ்வகையான 15 பீரங்கிகளுக்கு 4.4 மில்லியன் டொலர்களுக்கு வழங்கத்தயாராக இருந்தது. ஆனால் நீண்டகாலமாகவே சிறிலங்காக்கடற்படை இஸ்ரேலிடமிருந்தே உபகரணங்களைக் கொள்வனவு செய்துவருவதைக் காரணம் காட்டி 15 பீரங்கிகளை இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்ய கடற்படைத்தளபதி தயா சந்தகிரி முடிவு செய்துள்ளார்.

இதேவேளை 10 நாட்கள் உத்தியோக பூர்வ விஜயமாக கடந்த வியாழக்கிழமை இஸ்ரேலுக்குச் சென்றுள்ள சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பல ஆயுதக் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக இணைத்தளச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கடற்படைத் தளபதி தயாசந்தகிரியுடன் சென்றுள்ள இவர் இரு தரப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கண்ணீர் அஞ்சலி

மேற்படி எமது பாடசாலையில் சேவையாற்றிக் கொண்டிருந்த சிரேஸ்ட ஆசிரியை செல்வி.த.சஜந்திரா (பட்டதாரி) நேற்று இறைவனடி சேர்ந்துள்ளமையையொட்டி அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் வேதனையையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:- அதிபர்

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பா.அ.சங்கம்

முல்லைத்தீவு அ.த.க. பாடசாலை சுதந்திரபுரம், உடையார்கட்டு.

## வீரச்சாவு அறிவித்தல்



### வீரசிங்கம் இந்திரகுமார் (மோகன்)

நாகர்தனை வடக்கு ஊர்காவற்றுறையை நிரந்தர முகவரியாகவும் தேவிபுரம் சந்தி, புதுக்குடியிருப்பை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இந்திரகுமார் (மோகன்) என்பவர் சென்ற 14-06-2003 அன்று விடுதலைப் புலிகளின் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் தாக்கி அழிக்கப்பட்டபோது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவர் வீரசிங்கம் இந்திராவதி தம்பதிகளின் அன்பு மகனும், எழில்கண்ணன் (போராளி), இசைச்செல்வன் (போராளி), சாந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இளந்தென்றல் (போராளி) கீர்த்திகா (போராளி), உயிரமுதன் (போராளி), உதயதாசன் (வருவாய்த்துறை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நாகலட்சுமியின் (நாகபடுவான்) பேரனும், பத்மநாதன் தேவராணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பெறாமகனும் ரஞ்சிதம் (மல்லாவி), கந்தசாமி (த.போ.கழகம்), ருக்குமணி (பாலியாறு) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் திருவுருவப்படம் 14.07.2003 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு 15.07.2003 செவ்வாய்க்கிழமை 2.00 மணியளவில் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவிபுரம்சந்தி, புதுக்குடியிருப்பு. (சி.8422)

தகவல்:- வீ. சாந்தகுமார், சகோதரர்.

- திருமலை மாவட்டத்தில் -

# புலிகளின் எதிர்ப்பினால் சோதனை நடவடிக்கை நிறுத்தம்

(திருகோணமலை)

திருகோணமலையில் படையினர் மேற்கொண்ட சோதனைநடவடிகைக்கு விடுதலைப்புலிகள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அந்த நடவடிக்கைஇடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.

மனையா வெளிக்கிராமத்தில் நேற்றுக்காலை சிறிலங்கா கடற்படையினரும் பொலிசாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்தார்கள் இதனைக் கண்டித்த திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் இத்தேடுதல் நடவடிக்கையானது போர்நிறுத்த உடன்பாட்டிற்கு முரணானது என்று சுட்டிக்காட்டியதோடு மாவட்ட போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்கும் இதனைக்கொண்டுவந்தார். இதனை அடுத்துக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்ட பிரதித் தலைவர் தேடுதல் இடம் பெற்ற பகுதியைச் சென்று பார்வையிட்டு சிறிலங்காவின் மேலதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அதனை இடை நிறுத்தியுள்ளார்

# க.பொ.த. (உ/த) பரீட்சை முடிவுகள் அடுத்தமாத நடுப்பகுதியில்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் வெளிவரவுள்ளது. பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சை 20ஆம் திகதிவரை நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த வருடத்துக்கான 05ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சை மார்கழி மாதத்தில் நடைபெறும்.

# தமிழ் நாட்டிலிருந்து மேலும் 21 பேர் தாயகம் திரும்பினர்

(வடமராட்சி)

தமிழ் நாட்டிலிருந்து மேலும் 21 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்றுத் தாயகம் திரும்பியுள்ளார்கள்.

நேற்று இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் மூலம் இவர்கள் நெடுந்தீவுக் கரையில் தரையிறங்கியுள்ளனர்.

இதேவேளை இப்பகுதிக்குத் திரும்புவதற்கு தமிழ் நாட்டிலுள்ள பல அகதிகள் விரும்புவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஆயினும் இந்திய மீன்பிடிப் படகுகளுக்குப் பணம் கொடுத்து இலங்கை வரப்போதிய பணமின்றி அவதிப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

தாங்கள் நாடுதிரும்பப் போதிய நடவடிக்கைஎடுக்குமாறு கேட்டிருந்தும் அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்காத நிலையில் இந்திய மீன்பிடிப்படகுகளுக்கு தாங்கள் ஏராளமான பணத்தைக் கொடுத்துத் திரும்பிவந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (27)

### கண்காணிப்புக்...

கிண்ணியா முகாம் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையில் மூன்று சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை.

இதேவேளை இன்று மாலை கொழும்பு செல்லும் கண்காணிப்புக் குழுவினர் நாளை செவ்வாய்க்கிழமை வன்னிக்குச் சென்று கடற்புலிகளதுசிறப்புத் தளபதி கேணல் சூசையோடுபேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும் இச்சந்திப்பின்போது கடற்பரப்பில் இடம்பெற்று வரும் மோதல்களைத் தவிர்க்க கண்காணிப்புக்குழு முன் வைத்திருக்கும் புதிய யோசனை குறித்து ஆராயப்படும் என்றும் கண்காணிப்புக்குழுவின்பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பணியாளர் தேவை

கிளி. நகரில் பிரபல்யமான மின்னியல் இலத்திரனியல் விற்பனை நிலையத்திற்கு மின்னியல் இலத்திரனியல் விற்பனையில் அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை.

**வயது:** - 25 - 35 வயதுக்கு உட்பட்டவர். ஆங்கில அறிவுடையவர் விரும்பத்தக்கது.

**விண்ணப்ப முடிவுத்திகதி** - 25.07.2003

**விண்ணப்ப முகவரி:- ஈழநாதம், யாழ்.சாலை, கிளிநொச்சி.**

(சி-8421)

## மாபெரும் விளையாட்டுப் போட்டி

**இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடாத்தும்**

**மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2003**

மேற்படி லெப். செந்தூரன் ஞாபகார்த்த வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 19.07.2003 சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

**I உதைபந்தாட்டம்:-**

19.07.2003-03.08.2003 ஞாயிற்றுக்கிழமை வரை கழகங்களுக்கு வழங்கப்பட்ட நேர அட்டவணைப்படி நடைபெறும்.

**II துவிச்சக்கர வண்டி ஓட்டம்:-**

27.07.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுக்குடியிருப்பு சிவன்கோவில் முன்றலில் ஆரம்பமாகும்.

**III மரதன் ஓட்டம்:-**

31.07.2003 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு இரணைப்பாலை செந்தூரன் சிலைச் சந்தியில் ஆரம்பமாகும்.

**IV கயிறிழுத்தல் போட்டி :-**

31.07.2003 மாலை 2.30 மணிக்கு சென்.அன்ரனிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

*ஏனைய மைதான நிகழ்வுகள் அனைத்தும் 02.03.08.2003 திகதி மாலை மின்னொளியில் நடாத்தப்படும் என்பதை கழகங்களுக்கும் விளையாட்டு ரசிகர்களுக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.*

(3454)

சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் இரணைப்பாலை.